www.Padasalai.Net www.CBSEtips.in

T

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

T

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

*நேரம்: 1.30 மணி* *மதிப்பெண்கள்: 45*

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 10 x 1 = 10

**I. பலவுள் தெரிக:**

1. வேறுபட்டதைக் கண்டுபிடி.
   அ) அண்மைக் காட்சி துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
2. சரியானதைப் பொருத்தித் தேர்க:
   அ) காதை - கந்த புராணம்
   ஆ) சருக்கம் - சீவக சிந்தாமணி
   இ) இலம்பகம் - சூளாமணி
   ஈ) படலம் - சிலப்பதிகாரம்
   அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 3,4,2,1 ஈ) 4,3,1,2
3. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்
4. தவறான இணையைத் தேர்க:
   *பா வகை* *இலக்கியம்*
   அ) விருத்தப்பா - நாலடியார்
   ஆ) ஆசிரியப்பா - அகநானூறு
   இ) கலி வெண்பா - தூது
   ஈ) குறள் வெண்பா - திருக்குறள்
5. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்
   அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்
6. 'அரவாணன்' புதினத்தில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
   அ) எஸ்.இராமகிருஷ்ணன் ஆ) ஜெயமோகன் இ) அழகிரிசாமி ஈ) புதுமைப்பித்தன்
7. 'முருகு உறழ் முன்பொடு
   கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை
   - தொன்மங்களைக் கொண்ட இப்பாடலடி இடம்பெற்ற நூல்
   அ) அகநானூறு ஆ) தொல்காப்பியம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை
8. திருவிளையாடற் புராணத்துச் சிவன், நக்கீரன் ஆகியோரைக் கொண்டு அழகிரிசாமி எழுதிய சிறுகதை
   அ) பத்ம வியூகம் ஆ) விட்டகுறை, வெந்தழலாய் வேகாது
   இ) அரவாணன் ஈ) அறத்திற்குத் தருமன்
9. புகளூர்க் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலம்
   அ) கி.பி. 5 ஆம் நூற்றாண்டு ஆ) கி.பி.4 ஆம் நூற்றாண்டு
   இ) கி.பி. 3 ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி. 2 ஆம் நூற்றாண்டு
10. சேரல் இரும்பொறை மன்னர்கள் ஆட்சி செய்த இடம்
    அ) நாமக்கல் ஆ) திண்டுக்கல் இ) கருவூர ஈ) சேலம

**II. குறுவினா (எவையேனும் நான்கனுக்கு விடை தருக)** 4 x 2 = 8

11. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?
12. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



13. அறிவுடை வேந்தனின் நெறிகுறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை?
14. எண் வகை மெய்ப்பாடுகள் யாவை?
15. ஒற்றைக் கோணக்கலை எது? ஏன்?
16. சிலப்பதிகாரத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் நான்கினைக் கூறுக.

**III. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3 x 4 = 12

17. தமிழாக்கம் செய்க:
    1. Nature's gifts are there for all men.
    2. Animation
    3. Sound effect
    4. Take a lesson from the sun who shines on everyone.
18. புணர்ச்சி விதி தருக:
    1. பெருந்தேர் 2. அறிந்து
19. நயம் பாராட்டுக:

பூமிச் சருகாம் பாலையை
    முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
    புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
    இரவலரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
    விறகெரிக்க வீசுவேன்.

20. இலக்கணக்குறிப்பு தருக:
    ஓரீஇ, சொல்லுதல், காய்நெல், அறியா, தொல்நெறி, ஆடலும் பாடலும், புக்க, படுப்பதூஉம்

**IV. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக:** 3 x 5 = 15

21. மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

*(அல்லது)*

சங்க கால வரலாற்றை அறிய புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது?

22. சிலப்பதிகாரம் கூறும் நாட்டிய அரங்கின் அமைப்பு குறித்து எழுதுக.

*(அல்லது)*

எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. - நிறுவுக.

23. நேர மேலாண்மை குறித்து வெ.இறையன்பு இ.ஆ.ப. கூறுவதைத் தொகுத்தெழுதுக.

*(அல்லது)*

சார்லி சாப்ளின் அவர்களின் திரைச்சாதனை குறித்து எழுதுக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593